செய்தி வெளியீடு எண்: 564 நாள்:03.09.2019

செய்தி வெளியீடு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 556 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 9 மாநகராட்சிகள் 66 நகராட்சிகள் 347 பேரூராட்சிகள் மற்றும் 48948 கிராம குடியிருப்புகள் மற்றும் 4.23 கோடி மக்கள் தொகை பயனடைந்து வருகின்றனர். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சென்னை தவிர இதர பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 1825 மில்லியன் லிட்டர் விநியோகித்து வருகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வேண்டுதலின் பேரில் அரசு சார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் நல சங்கங்கள் பங்களிப்புடன் அனைத்து மக்களுக்கும் தரமான குடிநீர் தங்கு தடையின்றி வழங்கிட மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கும் பொருட்டு வேண்டுதல் விடுத்ததின்பேரில் ஸ்டேட் பாங்க் ஆப் இண்டியா, சென்னை வட்டம் தானாக முன் வந்து வேலூர் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணிகளை உருவாக்கிட ரூ. 20 லட்சம்

நன்கொடையாக இன்று திருமதி ஸ்ர்லி தாமஸ், பொது மேலாளர், ஸ்டேட் பாங்க் ஆப் இண்டியா, சென்னை வழங்கியதை மதிப்பிற்குரிய ஹர்மந்தர்சிங், இ.ஆ.ப., அரசு முதன்மைச்செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். அப்பொழுது முனைவர் சி.நா.மகேஸ்வரன், இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை,
ஸ்ரீ பெஞ்சமின் செரியன், துணை பொது மேலாளர், ஸ்டேட் பாங்க் ஆப் இண்டியா, பகுதி 1, சென்னை அவர்களும் உடன் இருந்தார்கள்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் புவி பௌதீக வரைபடம் 31 மாவட்டத்திலுள்ள 385 ஒன்றியத்திற்கும் தயார் செய்துள்ளது. இதன் மூலம் துள்ளியமான இடத்தை கண்டறிந்து ஆழ்குழாய் அமைக்கவும் அதே நேரத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்கவும் இயலும். இவ்வரைபடமானது மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஊரக வளர்ச்சி முகமை மற்றும் மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்தில் உள்ளது. முதன்மைச்செயலர்/தலைவர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்கள் பொது மக்களையும் பல்வேறு நிறுவனங்களையும் இந்த வரைபடத்தை பயன்படுத்தி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்க மற்றும் சிக்கனமாக நீரை பயன்படுத்தவும் கேட்டுக்கொள்கிறார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9